2016 ஜனவரி 21]

2012—2013 ஆம் ஆண்டு கட்டப்பட்ட நியாய விலைக் கடைகள் 4 ஆண்டுகள் கடந்தும் இதுவரையிலும் திறக்கப்படாமல் உள்ளன. இதுகுறித்து கடந்த கூட்டத் தொடரிலேயே மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டுவந்திருக்கின்றேன். எனவே, திறக்கப்படாமல் இருக்கின்ற நியாய விலைக் கடைகளைத் திறப்பதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 10—50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு தவறான கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டிருந்தால், மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் திறக்கப்பட்டிருக்கும் எந்தக் கடையையும், எதற்காகவும் தாமதப்படுத்துவது இல்லை. ஏதேனும் வழக்கு இருக்கும்பட்சத்தில், அந்தமாதிரி இருக்குமேயொழிய, வேறு ஒன்றும் இல்லை. உறுப்பினர் கோரிக்கையை எழுதிக் கொடுப்பாரேயானால், எப்பொழுது கட்டி முடிக்கப்பட்டது என்பது குறித்து உடனடியாகப் பதில் கேட்டு வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 8, மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு, மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

8—

திருமண மண்டபம்

***53876 திருமதி. க. அழகுவேலு:**

மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி நகராட்சியிலுள்ள அருள்மிகு சிதம்பரேஸ்வரர் திருக்கோயிலில் திருமண மண்டபம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி நகராட்சியில் அருள்மிகு சிதம்பரேஸ்வரர் திருக்கோயில் அமைந்துள்ள பகுதியில் தனியார் திருமண மண்டபங்கள் போதுமான எண்ணிக்கையில் உள்ளன. இத்திருக்கோயிலின் ஆண்டு வருமானம் இரண்டு இலட்சம் ரூபாய்க்கும் குறைவாகவே இருக்கிறது. திருமண மண்டபம் கட்டுமளவிற்கு திருக்கோயிலுக்குச் சொந்தமாக காலியிடமும் இல்லை. அதுமட்டுமல்லாமல், இத்திருக்கோயிலைச் சுற்றி அதிக அளவில் குடியிருப்புகள் இருப்பதாலும், போக்குவரத்து நெரிசல் ஆகிய காரணங்களினாலும் இங்கு திருமண மண்டபம் கட்டுவதற்குரிய சாத்தியக் கூறுகள் மிக குறைவாகவே இருக்கின்றன. இருந்தபோதிலும், தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை வருங்காலத்தில் பரிசீலிக்கும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு அவர்கள்.*

திருமதி க. அழகுவேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் குறைகளைத் தீர்க்க "அம்மா அழைப்பு மையம்" தந்து, தமிழினம் வாழவே தன் நலம் துறந்திட்ட தாயுருவப் போராளியே! எங்கள் அன்னையே! ஆலயங்கள்தோறும் அன்னதானம் தந்து, கோயில்கள்தோறும் ஒரு கால பூஜை நடக்க செய்து, அந்தப் பூஜைக்குத் தேவையான பூஜை சாமான்கள் அனைத்தையும் கொடுத்த மாண்புமிகு இதய தெய்வம், தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

2016 ஜனவரி 21]

எனது கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி நகராட்சியிலுள்ள அருள்மிகு சிதம்பரேஸ்வரர் திருக்கோயிலில் 50 x 80 அடி, அதாவது 4,000 சதுர அடியில் ஓர் அரிசி அரைவை மில், ஒரு கலன், இரண்டும் சேர்ந்து கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் உள்ளது. ஒரு நபர் அந்த அரைவை மில்லை குத்தகைக்கு எடுத்து நடத்திக் கொண்டிருக்கிறார். அந்த நபர் அந்த இடத்தை கோயிலுக்கே ஒப்படைப்பதாகக் கூறியிருக்கிறார். அந்தக் கோயிலில் ஏழையெளிய மக்கள் பயன்பெறும் வகையில், முகூர்த்த தினங்களில் குறைந்தபட்சம் 10 திருமணங்களாவது நடைபெறுகின்றன. இந்தச் சூழ்நிலையில், சுபமுகூர்த்த தினங்களில் இக்கோயிலுக்கு வரும் பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்வதில் இடையூறுகள் ஏற்படுகின்றன. எனவே, கோயிலுக்குச் சொந்தமாக ஒரு திருமண மண்டபம் அமைத்துத் தந்தால், ஏழையெளிய மக்கள் பயன்பெறுவார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, கோயிலுக்குச் சொந்தமாக ஒரு திருமண மண்டபம் அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமாய் அன்போடு கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் தன்னிகரில்லாத மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், தமிழகத்தில் இதுவரையிலே இல்லாத அளவில் வரலாற்றில் மிகப் பெரிய எண்ணிக்கையாக 8,499 திருக்கோயில்களுக்குத் திருப்பணிகள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த அளவுக்குத் திருப்பணிகளைச் செய்து, குடமுழுக்கு செய்த தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். அந்த அடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை வருங்காலத்தில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் பரிசீலிக்கப்படும் என்று ஏற்கெனவே நான் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியார் வைத்திருக்கிற ஓர் இடத்தை விட்டுக்கொடுக்க அவர் தயாராக இருக்கிறார். அது திருக்கோயிலின் இடம். அந்தத் திருக்கோயிலினுடைய இடத்தை விட்டுக்கொடுத்தால், அதைக் கட்டுவதற்கு அறநிலையத் துறை தயாராக இருக்குமா, பரிசீலிக்குமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அவ்வாறு தனியார் வைத்திருக்கின்ற

அந்த இடத்தை, திருக்கோயிலுக்கு விட்டுக் கொடுப்பதற்கு அவர்கள் தயாராக இருந்தால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை நிச்சயமாகப் பரிசீலிக்கும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு அவர்கள்.*

திருமதி க. அழகுவேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இடம் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடமாகும். ஆகவே, அங்கே திருமண மண்டபம் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.*

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்லாட்சி புரிந்து வரும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். தேனி மாவட்டம், மேற்கு தொடர்ச்சி மலை அருகில் இருக்கின்ற கூத்தநாச்சி ஆற்றின் அருகில் இருக்கின்ற கூத்தநாச்சியம்மன் கோயிலை எடுத்து, சிறப்பாகப் புனரமைத்து, அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்குச் சிறப்பு சேர்க்க வேண்டுமென்று கோருகிறேன். அந்தக் கோயிலுக்கு ஏற்கெனவே பத்து ஏக்கர் நிலம் இருக்கிறது. ஆகவே, அந்த நிலத்தை அரசு எடுத்து, அந்தக் கோயிலைக் கட்டித் தருமாறு தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள் கூத்தநாச்சியம்மன் திருக்கோயிலைப் புதிதாக*

2016 ஜனவரி 21]

புனரமைப்பதற்கு நிலம் இருக்கிறது. ஆகவே, அந்தத் நிலத்தை எடுத்து, அந்தத் திருக்கோயிலைப் புனரமைக்க வேண்டுமென்ற ஒரு கேள்வியை கேட்டிருந்தார். அதனைப் பரிசீலித்து, உரிய நடவடிக்கையை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. க. பாலகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான நிலங்களில் குடியிருக்கக்கூடிய ஏழையெளிய மக்கள், குடிசைகளில் வாழ்ந்து வருகின்றவர்களுக்கு மின் இணைப்பு வழங்கப்படாமல் இருக்கின்றது. மின் இணைப்பு வாங்க வேண்டுமென்று சொன்னால், இந்து சமய அறநிலையத் துறை ஆணையரிடமிருந்து அனுமதி பெற வேண்டுமென்ற விதி இருக்கின்றது. அதனைத் தளர்த்தி, ஆங்காங்கு உள்ள அலுவலகத்தில் அனுமதியைப் பெற்று, மின் இணைப்பைப் பெறுவதற்கான ஆணையை வழங்குவதற்கு அரசு முன்வருமா? அதோடு, 21 ஆம் நூற்றாண்டிலும் இருட்டிலேயே வாழ்ந்து வருகின்ற அந்த மக்களை, அரசு கணக்கில் எடுத்துக்கொண்டு, அந்த விதியைத் தளர்த்த முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருட்டிலே இருந்த தமிழக மக்களை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்த தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையில், எந்தப் பகுதியானாலும், சாதாரண மக்கள் கேட்கின்ற கோரிக்கையை எல்லாம் உடனடியாக நிறைவேற்றித் தருவதும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்களின் தொகுதியில் உள்ள திருக்கோயில் நிலங்களில்*

குடியிருப்பவர்களுக்கு, தடையின்மைச் சான்று பெறப்பட்ட பின்னர்தான் மின் இணைப்பு கொடுக்கப்படுகின்றது என்றும், அந்தச் சான்றிதழ் வாங்குவதற்குக் காலதாமதம் ஆகின்றது என்றும் சொன்னார்கள். அதாவது, 30 ஆண்டுகளுக்கு மேல் கோயில் நிலங்களில் குடியிருந்து வருபவர்களை வரன்முறை செய்ய வேண்டும் என்பது விதி. அதன் அடிப்படையில், அறநிலையத் துறைக்குச் சொந்தமான திருக்கோயில் நிலங்களில் குடியிருந்து வருபவர்களை வரன்முறை செய்து, அவர்களுக்கு உடனடியாக உரிய சான்றிதழ் வழங்கப்படுகின்றது. அதோடுமட்டுமல்லாமல், மின் இணைப்பு என்று வரும்போது, அந்தந்தப் பகுதிகளில் உள்ள அறநிலையத் துறை அதிகாரிகள், தங்கள் திருக்கோயிலின் கட்டுப்பாட்டிலுள்ள குடியிருப்புகளுக்கு, உடனடியாக NOC கொடுப்பதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை உடனடியாகப் பரிசீலிக்கப்பட்டு, சான்றிதழ் வழங்குவதற்குரிய நடவடிக்கையினை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 9, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன், மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

9—

சிற்றுந்து

***48067—திரு. என்.ஆர். ரெங்கராஜன்:**

மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புறநகர் மற்றும் கிராமப் பகுதிகளில் புதிய வழித்தடங்களில் சிற்றுந்துகள் இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*